ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ

அதி விசேஷமானது

අංක 2160/43 - 2020 ජනවාරි මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.01.30

*2160/43 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78* (XV) *(அ).*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல் (2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 2050/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 1997 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதிய 968/6 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினைத் தாபிப்பது தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை அதன் I ஆம் நிரலில் காணப்படும் “பிரயோக விஞ்ஞான பீடம்” என்னும் பதிவையும் அதன் II ஆம் நிரலில் காணப்படும் அதனது நேரொத்த பதிவுகளையும் உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| “தொழில்நுட்பவியல் கற்கைகள் பீடம் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை”. |

கலாநிதி பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
*2020, சனவரி 29.*

*02-273*

1A - PG 4859 — 518 (2020/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.